**26.05.2025**

**C.C. No.113/2023**

**ம.சா.1 சண்முகம்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) எனது சொந்த ஊர் கண்டனூர் ஆகும். எதிரி எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் பாலையூர். எதிரி நல்ல பழக்கம் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எனது நண்பர் மூலம் பழக்கம் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த நண்பரின் ஊர் மற்றும் முகவரியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு உறவினர் இல்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். நான் பி.காம். படித்துள்ளேன். நான் வட்டி தொழில் செய்வதற்கு முறையான லைசென்ஸ் பெறவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை.**

**2) எதிரி கடந்த 10.09.2022 ம் தேதி என்ன அவரச தேவைக்காக ரூ. 4 லட்சம் கேட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சொல்லவில்லை. எந்த தேவைக்காக கடன் கேட்டார் என்று குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் கடந்த 10.09.2022 எதிரி என்னிடம் கடன் பெறுவதற்கு எதிரிக்கு எந்தவிதமான அத்தியாவசியமான தேவையும் இல்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 10.09.2022 க்கு இரண்டு நாட்களுக்கு எதிரி என்னிடம் பணம் கேட்டார். மேற்படி விபரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, எனது நிரூபண வாக்குமூலத்திலோ, எனது புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை எனது வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது அதில் போதி தொகை இல்லை என்ற காரணத்துடன் திருப்பப்பட்ட விபரத்தை எனது 27.04.2023 ம் தேதியிட்ட வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பை பதிவு தபால் மூலம் அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அ.சா.ஆ. 3 என்று**

குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி அறிவிப்பில் எதிரி பெயர் மல்லிகா என்றும் அவரது கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிட்ட அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவிலும் எதிரி பெயர் மல்லிகா என்றும் அவரது கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் அடையிலும் எதிரி பெயர் மல்லிகா என்றும் அவரது கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மல்லிகா கையொப்பம் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. அதில் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமத மனு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அ ந்த காலதாமத மனுவிலும் எதிரி பெயர் மல்லிகா என்றும் அவரது கணவர் பெயர் ஆறுமுகம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி இடை மனு நகல் எதிரிக்கு அனுப்பப்பட்டு அதை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையில் எதிரி பெயர் மல்லிகா என்றும் அவரது கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எதிரியை யார் என்றே தெரியாது என்றாலும், எதிரிக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் முதன் முதலாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அவரது மருமகன் கனேஷ் தான் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் நான் குறிப்பிட்ட தேதியில் ரூ. 4 லட்சம் கடன் பெறவில்லை என்றால் என்றாலும், சட்டபடியான கடனை எதிரி திருப்பி செலுத்துவதற்கு வழக்கு காசோலையை எதிரியால் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும், மேற்படி காசோலை எதிரியால் பூர்த்தி செய்யப்படவில்லை என்றாலும், அதில் உள்ள கையொப்பம் எதிரியால் செய்து கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

5) எதிரியிடம் இருந்து ரூ.4 லட்சம் கடன் கொடுக்கப்பட்டதற்கு சொத்து பத்திரம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் இருக்கிறார். எதிரியின் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றும், எவ்வளவு சம்பளம் பெறுகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியாக தெரியாது. நான் சொன்ன தேதியில் எதிரிக்கு ரூ. 4 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரியின் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். எதிரியின் கணவர் 2022 வருடத்திற்கு முன்பு 6 வருடங்களுக்கு முன்பாக எதிரியின் மகளின் திருமனத்திற்காக வெளிநாட்டிலிருந்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் சுமார் 25 ஆண்டுகளாக சிங்கபூரில் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

6) எதிரிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன் மற்றும் ஒரு மகள். எதிரியின் மகன் சிங்கபூரில் வேலை செய்து வருகிறார். எதிரியின் மகளும் சிங்கபூரில் திருமணமாகி கணவருடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எதிரிக்கு நான் குறிப்பிட்ட தேதியில் எந்த கடனும் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலயில் 28.03.2023 தேதியிட்டதும், பெயர் மற்றும் விபரங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொகை எண்ணால் ரூ. 4 லட்சத்து 25 ஆயிரம் என்பதும் ஒரே மையினாலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் மல்லிகா என்ற எழுத்து தெளிவாக இல்லை என்றால் என் முன்பாக கையொப்பம் செய்தார்.வழக்கு காசோலையில் பின் பக்கம் எதிரியின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் இல்லை. அக்கொண்ட் வகை செக்கிற்கு கையெழுத்து தேவையில்லை.

7) நான் இவ்வழக்கு சம்பந்தமாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு முறையாக சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எதிரியால் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் தேதிக்கு பின்னர் அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் அவர் 6 மாதம்

அவகாசம் கேட்டதால் 6 மாத முடிந்து பணத்தை கேட்டபோது வழக்கு காசோலையை கொடுத்தார். எதிரி என்னிடம் 6 மாத கால அவகாசத்தில் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் எனக்கு அனுப்பவில்லை எனது வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ளார். எதிரி என்ன படித்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

8) எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கவரிலும் எதிரியின் கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், தவறுதலாக அவரது மகன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு கோப்பிற்கு எடுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட தபால் உறையில எதிரியின் பெயர் மல்லிகா, கணவர் பெயர் ராமன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் கணவர் பெயர் புகார் மனு, அறிவிப்பு போன்றவற்றில் தவறுதலாக உள்ளது என்பதை திருத்தம் செய்ய கோரி மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல.

( வழக்கறிஞரின் வேண்டுகோலுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.05.28 12:00:20 +0530

விரைவு நீதிபதி காரைக்குடி(FAC)